இணைப்பு—1.

(22-ம் பக்கத்தில் 272-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை உதவித் தொகை வழங்கி வருகிறது. இவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை இருவகைப்படும். ஒன்று 'உண்டி-உறையுள் உதவித் தொகை' (Residential scholarship) மற்றொன்று சம்பள உதவித்தொகை (Non-residential scholarships) ஆகும். இச் சலுகைகள் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று ஆண்டு வருமானம் ரூ. 2,000 க்கு மேற்படாத குடும்பத்தைச் சேர்ந்த பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உண்டு.

உண்டி-உறையுள் சலுகை பின்தங்கிய வகுப்பினருக்கு கல்லூரிப் படிப்புக்கு மட்டும் கொடுக்கப்படும். 9, 10, 11-ம் ஆம் வகுப்புகளில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு கட்டணங்கள் (Fees) புத்தகச் செலவு, தனிக் கட்டணங்கள் (Special fees) முதலியவை ஈடு செய்யப்படுகின்றன. இவர்களுக்கு உண்டி உறையுள் சலுகை கிடையாது.

ரூ. 1,500 க்கு உட்பட்ட வருமானமுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு கல்வித் துறையினர் அரைச் சம்பளச் சலுகை அளிக்கின்றனர். மீதியுள்ள அரைச் சம்பளத்தை பின்தங்கிய வகுப்பினர் துறை அளிக்கிறது. ரூ. 1,500 க்கு மேல் ரூ. 2,000 வரை வருமானமுள்ள பின் தங்கிய மாணவர்களுக்கு பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை அரைச் சம்பளச் சலுகை அளிக்கிறது. குறிப்பிட்ட சில டெக்னலாஜிக்கல் (Technological) படிப்புகளுக்கு முழுச் சம்பள சலுகை அளிக்கப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்று வரும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்வித்துறையினரால் கொடுக்கப்படும் உதவித் தொகை (Stipend) போக பிற்பட்ட வகுப்பினர் நலத்துறையும் கீழ்க்கண்டவாறு உதவி அளித்து வருகிறது.

	Junior	Senior
Elementary Grade	Rs. 15 per annum	Rs. 18 per annum
Secondary Grade	Rs. 35 ,,	Rs. 25 ,,

(B.T.) அல்லது (Residential) பயிலும் மாணவர்களுக்கு உண்டி உறையுள் உதவித் தொகையும், அது அல்லாத உதவித்

1972 மார்ச் 1]

தொகையும் அளிக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் கல்விக்கு உதவித் தொகை அளிக்க நடப்பு ஆண்டில் ரூ. 275.96 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது

பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிக்க 28 விடுதிகள் அரசினரால் நடத்தப்படுகின்றன. 1971-72 ஆம் ஆண்டில் 50 விடுதிகள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதில் உறையும் மாணவர்களுக்கு உணவுக்கு மாதம் ஒன்றிற்கு தலைக்கு ரூ. 25 விதம் செலவிடப்படுகிறது.

மேற்சொன்ன அரசினர் விடுதிகளைத் தவிர தனியாரால் நடத்தப்படும் அங்கிகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதமொன்றுக்கு தலைக்கு ரூ. 20 விதம் மானியமாக அளிக்கப்படுகிறது.

Backward Classes students studying in High Schools and colleges are sanctioned scholarship by the backward classes Department. The scholarships are of two kinds. One is residential scholarship and another non-residential scholarship. This vill be applicable to students who secure 40 per cent marks and whose parental income does not exceed Rs. 2,000 per annum.

2. Residential scholarship is payable to Backward Classes students for post matric studies only. Students studying in the 9th, 10th and 11th standards are sanctioned fees, book money and special fees. They are not eligible for Boarding and Lodging charges.

3. Backward Classes students whose parental income does not exceed Rs. 1,500 per annum are paid half tuition fees by the Education Department. The remaining half tuition fees is being paid by Backward Classes Department. Students in the income group Rs. 1,501—2,000 are being paid half tuition fees by the Backward Classes Department. Full tuition fees is being paid to certain technological courses.

4. In addition to the stipend paid by the Education Department to the Backward Classes students undergoing training in Teachers' Training School, the Backward Classes Department sanctions the following amount :—

	Junior	Senior
Elementary Grade	**Rs. 15 per annum**	**Rs. 18 per annum**
Secondary Grade	**Rs. 35 ,,**	**Rs. 25 per annum**

Students pursuing B.T. and B.Ed. are paid both residential and non-residential scholarships.

A provision of Rs. 275.96 lakhs has been made in the current year's budget for sanction of scholarship to Backward Classes students.

Twenty-eight hostels are being run by the Backward Classes Department for the benefit of Backward Classes students. Fifty new hostels have been ordered to be opened during 1971-72. A sum of Rs. 25 is being paid as food charges to the Backward Classes students staying there.

Besides the Government hostels referred to above, Backward Classes students staying in private hostels recognised by the Harijan Welfare Department are paid Rs. 20 per mensem each.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS